மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 22 திங்கட்கிழமை 08.12.2025 கதிர் 402




## நேர்மையுடன் செயற்படுங்கள்: நீதியாகப் புள்ளியிடுங்கள் பேரவை உறுப்பினர்களுக்கு ஆணைக்குழு அறிவுறுத்தல்!


இன்று 08.12.2025, 11.00 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினர்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முக்கிய உறுப்பினர்களுடன் ஒரு சந்திப்பு நடைபெற்றது.

7

# ‘அணையா விளக்கு’ தூபியை உடைத்தவர்களைக் கைது செய்!

## பொலிஸில் அநுரவின் கட்சி முறைப்பாடு





පොලිස් පෝරම අංක 1/B

පැමිණිලි ලදුපත
முறைப்பாடு ஏற்றுக்கொள்ளல்
Acknowledgement of Complaint

| | |
|---|---|
| පොලිස් ස්ථානය / பொலிஸ் நிலையம் / Police Station | யாழ்ப்பாணம் |
| දිනය / திகதி / Date | 2025/12/08 |
| පැමිණිලිකරුගේ නම / முறைப்பாடு செய்பவரின் பெயர் / Name of Complainant | S. பிரதீபன் |
| පැමිණිල්ලේ ස්වභාවය / முறைப்பாட்டின் வகை / Nature of Complaint | அணையா விளக்கு நினைவுத்தூபி உடைக்கப்பட்டமை தொடர்பாக |
| තොරතුරු පොතේ යොමුව / தகவல் புத்தக விபரம் / I. B. Reference | MOIB 87/71 |
| සටහන් කරන නිලධාරියාගේ අත්සන / முறைப்பாடு பதிபவரின் கையொப்பம் / Signature of Recording Officer | Dharmaraja |
| සටහන් කරන නිලධාරියාගේ නම, තනතුර හා නිල අංකය / முறைப்பாடு பதிபவரின் பெயரும் பதவியும் பதிவிலக்கமும் / Name Rank/& Reg. No. of Recording Officer | K. Dharmaraja PC 99690 |

H 060765 – 5,000 (2025/01)P ශ්‍රී ලංකා රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුව

யாழ்ப்பாணம், டிச. 08

செம்மணியில் அமைந்திருந்த ‘அணையா விளக்கு’ போராட்ட நினைவுத் தூபியை மீண்டும் சேதப்படுத்தியவர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு கோரி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாநகர சபை உறுப்பினர் சண்முகநாதன் பிரதீபன் செய்துள்ளார்.

செம்மணிப் படுகொலை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி கடந்த ஜூன் மாதம் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் நினைவாக செம்மணியில் ‘அணையா விளக்கு’ நினைவுத் தூபி அமைக்கப்பட்டிருந்தது.


இவ்வாறான நிலைமையில் கடந்த ஒக்ரோபர் மாதம் இனந்தெரியாதோரால் இந்த நினைவுத் தூபி உடைக்கப்பட்டிருந்தது.

எனினும், இந்தத் தூபி உடனடியாகப் புனரமைப்புச் செய்யப்பட்டது.

இந் நிலையில் நேற்று மீளவும் இனந்தெரியாதோரால் இந்த நினைவுத் தூபி உடைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இந்தத் தூபியைச் சேதமாக்கிய சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்று அரச கட்சியினரே யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தது.

## அனர்த்த உயிரிழப்பு 635 ஆக அதிகரிப்பு!



கொழும்பு, டிச. 08

இலங்கையில் ஏற்பட்ட அனர்த்த நிலைமை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 635 ஆக அதிகரித்துள்ளது. மேலும் 192 பேர்

7

## ஊர்காவற்றுறை பிரதேச சபை பட்ஜட் இரண்டாவது தடவையாகவும் தோல்வி



யாழ்ப்பாணம், டிச. 08

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் ஆளுகைக்குட்பட்ட ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டது.

இருந்தும் உள்ளூராட்சி மன்ற சட்டங்களில் இருக்கும் விசேட சரத்துக்கமைய தவிசாளருக்கு இருக்கும் தன்னிச்சையான அதிகாரம் ஊடாக பாதீடு நடைமுறையாகின்றது.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் முதலாவது பாதீடு கடந்த 24 ஆம் திகதி தோற்கடிக்கப்பட்ட நிலையில்

7

## காவலில் மட்டக்களப்பு இளைஞர் மர்ம மரணம்: சுயாதீன விசாரணை கோருகிறார் சாணக்கியன்



மட்டக்களப்பு, டிச. 08

இம்மாதம் (டிசம்பர்) 2 ஆம் திகதி மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸாரால் சைக்கிள் திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 59ஃ24, வாவிகாரி வீதி, சின்ன உப்போடை, மட்டக்களப்பைச் சேர்ந்த சிவநேசராசா ரினோஷன் (வயது 23) என்ற இளைஞரின் மர்ம மரணம் குறித்து சுயாதீன விசாரணை நடத்த வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கோரியிருக்கின்றார்.

7

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## மனித பாவனைக்கு உதவாத 12,000 கிலோகிராம் இறைச்சிக்கு சீல்– அனுராதபுரத்தில் சம்பவம்!

கொழும்பு, டிசெ.8

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கால்நடை பண்ணையொன்றில் மனித பாவனைக்கு பொருந்தாத நிலையை அடைந்த 12,000 கிலோகிராம் இறைச்சிக்கு பொது சுகாதார பரிசோதகர்களால் நேற்றையதினம் (7) சீல்வைக்கப்பட்டுள்ளது.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு (1926) கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே இந்த இறைச்சித் தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சம்பந்தப்பட்ட கால்நடை பண்ணையை பொது சுகாதார பரிசோதகர்கள் சோதனையிட்டு, கண்டுபிடிக்கப்பட்ட இறைச்சித் தொகைக்கு சீல் வைத்ததாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் பிரதீப் போரலஸ்ஸ தெரிவித்தார்.

அத்துடன் குறித்த இறைச்சியின் மாதிரிகள் நாளை (8) அரச இரசாயன பகுப்பாய்வாளரிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளன.

பகுப்பாய்வு அறிக்கைகளின் அடிப்படையில் மேலதிக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் பிரதீப் போரலஸ்ஸ மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குடிநீர் போத்தல்களை அதிக விலைக்கு விற்பனை செய்த நிறுவனம்– ஒரு மில்லியன் ரூபா அபராதம்!

கொழும்பு, டிசெ.8

குடிநீர் போத்தல்களை அதிக விலைக்கு விற்பனை செய்த பெலிஹுல்ஓயா மற்றும் பண்டாரவளை பிரதேசத்தில் உள்ள விடுதி மற்றும் தனியார் நிறுவனமொன்றிற்கு ஒரு மில்லியன் ரூபா அபராதம் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

பெலிஹுல்ஓயா பிரதேசத்தில் உள்ள குறித்த விடுதியானது, 100 ரூபாவிற்கு விற்கப்பட வேண்டிய ஒரு லீற்றர் குடிநீர் போத்தல் ஒன்றை 400 ரூபாவிற்கு விற்பனை செய்திருந்தது. குறித்த விடயம் தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த நிறுவனத்திற்கு எதிராக பலாங்கொடை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது பலாங்கொடை நீதவான் நீதிமன்றம் குறித்த விடுதிக்கு ஒரு மில்லியன் ரூபா அபராதம் விதித்து உத்தரவிட்டது.

அதேவேளை, 70 ரூபாவிற்கு விற்கப்பட வேண்டிய 500 மில்லி லீற்றர் குடிநீர் போத்தல் ஒன்றை, 230 ரூபாவிற்கு விற்பனை செய்த பண்டாரவளை, எல்ல பிரதேசத்தைச் சேர்ந்த தனியார் நிறுவனமொன்றிற்கு எதிராகவும் நுகர்வோர் விவகார அதிகார சபையினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இதன்போதும் குறித்த நிறுவனத்திற்கும் ஒரு மில்லியன் ரூபா அபராதம் விதித்து பண்டாரவளை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 190 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைது!

கொழும்பு, டிசெ.8

பனாமுரே - மித்தெனியா வீதியின் லெல்லவல பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

செவனகல பிரதேசத்தைச் சேர்ந்த 27 மற்றும் 36 வயதுடைய நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் இருவரும் கார் ஒன்றில் பயணம் செய்துகொண்டிருந்த வேளையில் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைதான நபர்களிடம் இருந்து 190 கிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பனாமுரே பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அனர்த்த நிலமையால் பாதிக்கப்பட்டிருந்த கால்வாய்களை புனரமைக்க துரித நடவடிக்கை!

*கொழும்பு, டிசெ.8*

*நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலமையால் பாதிக்கப்பட்டிருந்த நீர்த்தேக்கங்கள் மற்றும் கால்வாய்களை விரைவாக முன்னைய நிலைக்கு கொண்டுவரும் பொருட்டு துரித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*அநர்த்தத்தினால் அதிகமாக பாதிக்கப்பட்ட இடங்கள் மற்றும் சேதமடைந்த பகுதிகளை தற்காலிகமாகவேனும் சீரமைத்து, நீரை திறந்து விடுவதன் மூலம் பாதிக்கப்பட்ட நெல் வயல்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை நீர்ப்பாசனத் திணைக்களம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாக அத்திணைக்களத்தின் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பொறியியலாளர் எல்.எஸ். சூரியபண்டார தெரிவித்தார்.*

*சேதமடைந்த இடங்கள் மற்றும் கால்வாய்களை புனரமைக்கும் பணிகளுக்கு பாதுகாப்புப் படையினர், விவசாயிகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளதாகவும், அவற்றை விரைவாக சீரமைத்த பின்னர் உரிய விவசாய நடவடிக்கைகளுக்காக நீர் திறந்து விடப்படும் எனவும் பொறியியலாளர் எல்.எஸ். சூரியபண்டார மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.*



# "மலையக அதிகார சபையை" பயன்படுத்துங்கள் - மலையக அரசியல் தலைமை ஒருங்கிணைப்பாளர் கோரிக்கை!



மலையகத்தில் மீள்கட்டுமானப் பணிகளுக்காக நிதி, நிர்வாக, காணி அதிகாரங்களைப் பயன்படுத்தக் கூடிய "மலையக அதிகார சபையை" பயன்படுத்துங்கள் என மலையக அரசியல் அரங்கம் ஜனாதிபதிக்கு கடிதத்தை அனுப்பி வைத்துள்ளது.

டித்வா புயலின் தாக்கத்தால் முழு நாடும் பாதிப்புக்குள்ளாகி இருக்கும் நிலையில், ஏற்கனவே சமூக, பொருளாதார சிக்கலில் தவிக்கும் மலையக மக்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர்.

இலங்கை அரச நிர்வாகப் பொறிமுறையின் கட்டமைப்பு குறைபாடுகள் காரணமாக மலையகப் பெருந் தோட்டப்பகுதிகளில் நாட்டின் ஏனைய பிரதேசங்களைப் போன்று அரச பொது நிர்வாக முறைமை மலையகத்தில் முழுமையாக சென்று சேர்வதில்லை.

2018 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க சட்டத்தின் படி தேசிய இடர் முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து பணியாற்றக்கூடிய வாய்ப்புள்ள, மலையக மக்களுக்கு பணியாற்றுவதற்கென உருவாக்கப்பட்ட மலைநாட்டு புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையை மலையகத்தில் மீள்கட்டுமானப் பணிகளுக்காக பயன்படுத்த முடியும்.

ஆகையால் ஜனாதிபதியின் பொறுப்பில் உள்ள பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய இடர் முகாமைத்துவ நிலையத்தை அதிகார சபையுடன் இணைந்து செயற்படும் வகையில் சுற்றுநிருபத்தை வெளியிட வேண்டும் என மலையக அரசியல் அரங்கம் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் கோரியுள்ளது.

மலையக அரசியல் அரங்கத்தின் சார்பில் மேற்படி கோரிக்கை அடங்கிய கடிதம் ஜனாதிபதி உள்ளிட்ட அரச தரப்பினருக்கு மும்மொழிகளிலும் அனுப்பப்பட்டுள்ளதாக அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜா ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். இது குறித்து மேலும் கருத்துத் தெரிவிக்கையில்: நாடளாவிய ரீதியல் ஏற்பட்டிருக்கும் பேர் அனர்த்தத்தில் இருந்து மீண்டெழுவதற்காக ஜனாதிபதி என்ற வகையிலும் நிதி அமைச்சர் என்ற வகையிலும் குழுக்களையும் சிறப்பு படையணிகளையும் நிதியங்களையும் ஜனாதிபதி அமைத்துவருகிறார்.

இந்த ஏற்பாடுகள் வழமையான அரச நிர்வாக பொறிமுறைகளான கிராம சேவையாளர்கள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலகங்கள் ஊடாகவே மக்களை சென்றடையும்.

மலையகத்தில் இந்த பொது நிர்வாகப் பொறிமுறையில் பாரிய எண்ணிக்கையிலான குறைபாடுகள் காணப்படுகின்றமை பலரும் அறிந்ததே. ஒரு கிராம சேவகர் பிரிவின் கீழ் அல்லது பிரதேச செயலகப்பிரிவின் கீழ் அதிகளவான சனத்தொகை உள்ளடங்குவதால் அரச பொது நிர்வாக சேவைகள் மக்களை முறையாக சென்று சேர்வதில்லை.

இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு மலைநாட்டு மக்களுக்கு சேவையாற்றுவதற்கென 2018 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்கச் சட்டத்தின்படி உருவாகக்பட்ட அதிகார சபையை பயன்படுத்துவதே இச் சந்தர்ப்பத்தில் பொருத்தமான தீர்வாக அமையும்.

தற்போதைய நிலையில் மலையகத்தில் மீட்பு பணிகளுக்காகவும் மீள்கட்டமாணப் பணிகளுக்காகவும் பெருமளவு நிதி தேவையான நிலையில் நாடாளுமன்றம் ஊடாகவும் நேரடியாக நிதி ஒதுக்கீடுகளைச் செய்யவும் சுயாதீனமாக நிதியினைத் திரட்டி பணியாற்றவும் சட்டப்படியான அதிகாரம் கொண்ட அதிகார சபையை பயன்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்.

தன்னார்வ நிறுவனங்களும் தனிப்பட்டவர்களும் மலையக மக்களுக்கு என வழங்க முன்வரும் நிதிகளை இதன் மூலம் நேரடியாகப் பயன்படுத்த முடியும். அதே நேரம் காணிகளை கையாளக் கூடிய அதிகாரமும் அதிகார சபைக்கு உள்ளது. மறுபுறம் இதுவரை காலமும் அதிகார சபை தனியான அலுவலகத்தையும் பணியாளர்களையும் கொண்டு இயங்காத நிலையும் காணப்படுகின்றது.

அதனை சரி செய்யும் வகையில் மலையக மாவட்டங்களின் பிரதேச செயலகங்களில் பணியாற்றும் பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் வசதியளிப்பாளர் (ஊஊகு) எனும் பதவிகளில் பணியாற்றும் நூற்றுக்கணக்கான உத்தியோகத்தர்ளை அதிகார சபையின் இணைப்பாளர்களாக நியமிக்க முடியும்.

அவர்கள் கிராம சேவர்களுக்கு பக்கபலமாக இயங்கலாம். அமைச்சர் விஜித்த ஹேரத் உடனான சந்திப்பின் போதும் நாம் இந்த யோசனையை முன்வைத்திருந்தோம்.

மேற்படி ஆலோசனைகள் அடங்கிய கடிதத்தை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மூத்த அமைச்சர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளோம்.

இந்த காத்திரமான ஆலோசனைகளை வலுப்படுத்தும் வகையில் மலையக மக்கள் மீதான அக்கறையாளர்கள் அனைவரும் அரசாங்கத்திடம் இந்த கோரிக்கையை முன்னகர்த்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

# பாதிக்கப்பட்ட கைத்தொழில்களுக்கு விரைவில் 2 இலட்சம் ரூபா கொடுப்பனவு!

சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட அவசர அனர்த்த நிலைமையினால் பாதிக்கப்பட்ட கைத்தொழில்களை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் 2 இலட்சம் ரூபா கொடுப்பனவு தொடர்பில் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.



கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சில் பதிவு செய்யப்பட்ட கைத்தொழில்கள் மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, கைத்தொழில் அபிவிருத்தி சபை, தேசிய தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அதிகார சபை, சிறு தொழில் அபிவிருத்தி பிரிவு, தேசிய உற்பத்தித்திறன் செயலகம், தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் தேசிய வடிவமைப்பு நிலையம் ஆகிய நிறுவனங்களில் பதிவு செய்யப்பட்ட பாதிக்கப்பட்ட கைத்தொழிலாளர்களுக்கு இந்த 2 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக்கொள்ளும் வசதி காணப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்காக கைத்தொழில் உரிமையாளர்கள் றறற. ணைெரளவசல.பழஎ.டம எனும் இணையத்தளம் ஊடாகவோ அல்லது மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் உள்ள தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிறு தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஏற்றுமதி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் ஊடாகவோ இக்கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்க முடியும் எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் 'டித்வா' புயல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள கைத்தொழில்களை மீளக் கட்டியெழுப்புவதற்காக அக் கைத்தொழில்கள் தொடர்பான தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு பொறிமுறையை கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு முன்னெடுத்துள்ளதோடு, பாதிக்கப்பட்ட கைத்தொழில்கள் தொடர்பில் அமைச்சுக்கு தகவல் வழங்குவதற்கு "0712666660" எனும் தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பாதிக்கப்பட்ட கைத்தொழில்கள் தொடர்பான உரிய தகவல்களை கூடிய விரைவில் வழங்குமாறும் அமைச்சு பாதிக்கப்பட்ட கைத்தொழிலாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இத்தகவல்களை வழங்குதல் டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதோடு, தகவல்களை உள்ளிடுதலை றறற.ணைெரளவசல. பழஎ.டம ஊடாக அல்லது ாவவிள:ஃஃயனை. கடழுனளரிழசவ.ழசபஃடிரளைநெளள-ைஅியஉவ ஊடாக மேற்கொள்ள முடியும்.

தேவையான ஒத்துழைப்பை நீங்கள் சார்ந்த பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலக மட்டத்தில் உள்ள கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும். இத்தகவல்களை சேகரித்ததன் பின்னர் பாதிக்கப்பட்ட அனைத்துக் கைத்தொழில்களையும் மீளக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான உதவியை வழங்குவதற்கும், ஒருங்கிணைப்பை மேற்கொள்ளவும் அமைச்சு எதிர்பார்க்கின்றது. (ஐ)

# சீனாவின் அனர்த்த நிவாரண சேவை விமானம் கட்டுநாயக்கவை வந்தடைந்தது!






சீன அரசாங்கத்தின் அனர்த்த நிவாரண சேவை விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தை இன்று காலை வந்தடைந்தது.

சுமார் 400 மில்லியன் ரூபா பெறுமதியான உணவு பொருட்கள் மற்றும் அனர்த்த நிவாரண பொருட்கள் இந்த விமானத்தில் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விமானத்தில் உள்ள பொருட்களின் மொத்த நிறை 84,525 கிலோ எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிவாரணப் பொருட்களில் லைஃப் ஜாக்கெட்டுகள், கூடாரங்கள், போர்வைகள் மற்றும் படுக்கை விரிப்புகள் ஆகியவை அடங்கும்.

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அனுர கருணாதிலகா, பாதுகாப்பு துணை அமைச்சர் அருண ஜெயசேகர மற்றும் இலங்கைக்கான சீனத் தூதர் குய் ஜென்ஹோங் உள்ளிட்ட ஒரு பெரிய குழு உதவியைப் பெறுவதற்காக விமான நிலையத்திற்கு வந்திருந்ததாகவும் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கையில் சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்கத்தில் சீனா அரசாங்கத்தினால் இந்த அனர்த்த நிவாரண சேவை வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# மடியில் கனமில்லை என்றால் முதல்வர் இதை செய்யணும்: இபிஎஸ் வலியுறுத்தல்

" அதிமுக தலைமையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, திமுக-வின் ஊழல் கறைவேட்டிகள் யாராக இருந்தாலும், கம்பி எண்ணப் போவது உறுதி" என எதிர்க்கட்சித் தலைவர் இபிஎஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் நேரு மீதான ரூ.1020 கோடி ஊழல் புகார் தொடர்பாக, தமிழக போலீஸ் டிஜிபிக்கு, அமலாக்கத்துறையினர், இரண்டாம் முறையாக கடிதம் எழுதியுள்ளனர். இது தொடர்பாக அதிமுக பொதுச்செயலாளரும், தமிழக சட்டசபை எதிர்க்கட்சி தலைவருமான இபிஎஸ் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது:

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் டெண்டர் எடுப்பதில் மட்டும் ரூ.1,020 கோடி ஊழலைக் கண்டறிந்துள்ளதாக அமலாக்கத்துறை , தமிழக பொறுப்பு டி.ஜி.பி.க்கு கடிதம் எழுதியுள்ளதாக செய்திகள் வருகின்றன.

ஸ்டாலின் மாடல் திமுக அரசின் அமைச்சர் நேரு, தனது உறவினர்கள் வாயிலாக டெண்டருக்கு 7.5மூ முதல் 10% வரை கமிஷன் கொள்ளை அடித்துள்ளது, இக்கடிதம் வாயிலாக வெளிவந்துள்ளது. கழிப்பறை கட்டுவது முதல், நபார்ட் வங்கி திட்டங்கள் வரை பட்டியல் போட்டு, 20%- 25% வரை பல்வேறு நிலைகளில் இந்த மெகா ஊழல் நடைபெற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



மேலும், இதெல்லாம் 'வுனி ழக வாந ஐஉநடிநசப' தான் என தெரிவித்துள்ள அமலாக்கத்துறை, இதனை முழுமையாக விசாரிக்குமாறு தெரிவித்துள்ளது. வரலாறு நெடுக விஞ்ஞான ஊழல்களுக்கே பெயர்போன கட்சியான திமுக நடத்தும் ஸ்டாலின் மாடல் ஆட்சி என்பதே, வெறும் 'கமிஷன்- கலெக்ஷன்- கரப்ஷன் மாடல்' தான் என்பதை நான் அடிக்கடி தெரிவித்து வருகிறேன்.

ஏற்கனவே அமலாக்கத்துறை அனுப்பிய ரூ. 888 கோடி வேலைக்கு பணம் கொடுத்த முறைகேட்டை இன்று வரை விசாரிக்காமல், ஊழல் அமைச்சரைக் காப்பாற்றி வருகிறது ஸ்டாலின் அரசு! தற்போது, அடுத்த ஊழலும் வெளிவந்துள்ளது. ஸ்டாலின் தலைமையிலான திமுக அமைச்சரவை கொள்ளையடித்த ஊழல் பணத்தையெல்லாம் மீட்டெடுத்தாலே,

-மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டத்தை மாநில அரசே செயல்படுத்தலாம்.

-ஆண்டுதோறும் மாணவர்களுக்கு லேப்டாப் கொடுத்திருக்கலாம்.

-பொங்கலுக்கு ரேஷன் கார்டுக்கு ரூ. 5000ஃ- தாராளமாக வழங்கலாம்.

அவ்வளவு ஏன், தமிழகத்துக்கு ஒரு ஆண்டிற்கான பட்ஜெட்டையே தாக்கல் செய்துவிடலாம். இவ்வளவு மக்கள் பணத்தை வாரி சுருட்டிக்கொண்டு, இன்னும் எத்தனை நாட்கள் தானும், தன் சகாக்களும் தப்பித்துக் கொள்வோம் என நினைத்துக் கொண்டிருக்கிறார் முதல்வர் ஸ்டாலின் ?காலம் மாறுகிறது. காட்சிகள் மாறத் தொடங்கிவிட்டன.

அதிமுக தலைமையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, திமுக-வின் ஊழல் கறைவேட்டிகள் யாராக இருந்தாலும், கம்பி எண்ணப் போவது உறுதி. உண்மையிலேயே ஸ்டாலினுக்கு மடியில் கனமில்லை என்றால், வழியில் பயமின்றி இந்த ஊழல்கள் குறித்து நேர்மையான விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும். செய்வாரா? இவ்வாறு அந்த அறிக்கையில் இபிஎஸ் கூறியுள்ளார். (ஐ)

# அனைத்து குளறுபடிகளுக்கும் இண்டிகோ நிறுவனமே காரணம்

## பார்லி.யில் அமைச்சர் குற்றச்சாட்டு



திட்டமிடலில் இண்டிகோ விமான நிறுவனம்ஏற்படுத்திய தவறுகளே அனைத்து குளறுபடிகளுக்கு காரணம். பாதுகாப்பில்எவ்வித சமரசமும் இல்லை என்று மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் ராம்மோகன் நாயுடு திட்டவட்டமாக கூறி உள்ளார்.

அ ண ் மை ம ய ி ல ் விமானிகளுக்கான புதிய நேர கட்டுப்பாட்டு விதிகள்( **Flight Duty Time Limit-FDLT)** நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டன. அதன் காரணமாக ஒரு வாரத்திற்கும் மேலாக இண்டிகோ நிறுவனத்தின் விமான சேவைகள் முடங்கின.

ஆயிரக்கணக்கான விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. நாட்டின் பல்வேறு நகரங்களில் உள்ள விமான நிலையங்களில் ஏராளமான பயணிகள் தவித்து போயினர். ஆங்காங்கே இண்டிகோ விமான நிறுவனத்தின் செயல்பாட்டைக்கண்டித்து விமான பயணிகள் அதிருப்தியையும் வெளிப்படுத்தினர்.

இது தொடர்பாக ராஜ்ய சபாவில் எம்பிக்கள் எழுப்பிய கேள்விகளுக்கு மத்திய சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம்மோகன் நாயுடு பதில் அளித்தார். அவர் தமது உரையில் கூறியதாவது

இந்த குளறுபடிகளுக்கு இண்டிகோ நிறுவன விமானிகள், அதன் பணியாளர்களின் அட்டவணை, உள்திட்டமிடல் போன்றவற்றில் ஏற்பட்ட குளறுபடிகளே காரணம் ஆகும். பணி நேர கட்டுப்பாட்டு விதிகள் தொடர்பாக தெளிவு பெற, இண்டிகோ நிறுவனத்துடன் நடைபெற்ற ஆலோசனையின் போது அந்த நிறுவனம் எவ்வித ஆட்சேபமும் தெரிவிக்கவில்லை.

எல்லாம் சாதாரணமாகவே இயங்கி கொண்டு இருந்தது. திடீரென டிச.3ம் தேதி இந்த பிரச்னையை நாங்கள் கவனித்தோம். மத்திய அமைச்சகம் உடனடியாக தலையிட்டது. நிலைமையை கட்டுப்படுத்தினோம்.

விமான புறப்பாடில் தாமதங்கள், ரத்து போன்றவற்றால் பாதிக்கப்படும் பயணிகளை பாதுகாக்க கடுமையான விமான போக்குவரத்து விதிகள் நடைமுறையில் உள்ளன. விமான நிறுவனங்கள் இதை பின்பற்ற வேண்டும்.

மென்பொருள் பிரச்னை பற்றி, விசாரணை நடத்தப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள விமான போக்குவரத்து துறை உலகளாவிய தர நிலைகள் கொண்டிருக்க வேண்டும் என்பதே அரசின் தொலைநோக்கு பார்வையாகும்.

இண்டிகோவில் உள்ள சிக்கல்கள், பணியாளர்கள் பட்டியல் மற்றும் செயல்பாடுகளை திட்டமிடுதல் தொடர்பானவை ஆகும். இவற்றை சம்பந்தப்பட்ட விமான நிறுவனங்கள் அன்றாடம் நிர்வகிக்கும் பொறுப்பை கொண்டுள்ளன.

விமானிகளுக்கான புதிய நேர கட்டுப்பாட்டு விதிகளை எந்தவொரு நிறுவனமும் பின்பற்ற வில்லை என்றால் கடுமையான நடவடிக்கையை எடுப்போம், இதில் சமரசம் கிடையாது.

பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு ரூ.569 கோடி வழங்கப்பட்டுள்ளது. புதிய உள்ளூர் விமான கட்டண விகிதங்களை பின்பற்றாதவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கையை மத்திய அரசு எடுத்து வருகிறது. இவ்வாறு மத்திய அமைச்சர் ராம்மோகன் நாயுடு கூறினார். (ஐ)



# நடிகைக்கு பாலியல் துன்புறுத்தல்: மலையாள நடிகர் திலீப் விடுதலை

பிரபல மலையாள நடிகை பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்ட வழக்கில், போதிய ஆதாரம் இல்லை என்பதால் நடிகர் திலீப் விடுதலை செய்யப்பட்டார். பல்சர் சுனி உட்பட 6 பேர் குற்றவாளிகள் என எர்ணாகுளம் நீதிமன்றம் அறிவித்தது.

பிரபல மலையாள நடிகர் திலீப். இவரது முன்னாள் மனைவி நடிகை மஞ்சு வாரியர். நடிகர் திலீப்பின் ரகசிய உறவுகளை இன்னொரு நடிகை, மஞ்சு வாரியரிடம் கூறிவிட்டார். இதனால் ஆத்திரம் அடைந்த மஞ்சு வாரியர், கணவரிடம் இருந்து விவாகரத்து பெற்று பிரிந்து விட்டார்.

இதற்கு, குறிப்பிட்ட அந்த நடிகை தான் காரணம் என்று முடிவு செய்த திலீப், கூலிப்படையை பயன்படுத்தி நடிகையை காரில் கடத்திச் சென்று பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கினார் என்பது குற்றச்சாட்டு. இந்த சம்பவம் கடந்த 2017ம் ஆண்டு நடந்தது. பிரபல நடிகர் நடிகைகள் சம்பந்தப்பட்ட இந்த வழக்கு நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

வழக்கை விசாரித்த போலீசார், நடிகர் திலீப் மற்றும் சம்பவத்தில் நேரடியாக ஈடுபட்ட குற்றவாளிகளை கைது செய்தனர். திலீப் இரண்டரை மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். மலையாள திரையுலகில் அடுத்தடுத்து பல்வேறு சர்ச்சைகள் கிளம்பவும் இந்த சம்பவம் காரணமாக அமைந்தது.

எட்டு ஆண்டுகளாக தொடர்ந்து விசாரிக்கப்பட்ட இந்த வழக்கில் அடுத்தடுத்து பல திருப்பங்கள் ஏற்பட்டன. வழக்கின் விசாரணை அதிகாரிகளை கொலை செய்ய திட்டமிட்டதாகவும் நடிகர் திலீப் மீது வழக்கு பதியப்பட்டது.

உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் என வெவ்வேறு நீதிமன்றங்களில் இது தொடர்பாக வழக்குகள் நடத்தப்பட்டன. 28 பேர் பிறழ் சாட்சியம் அளித்த இந்த வழக்கில் இன்று எர்ணாகுளம் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது. போதிய ஆதாரம் இல்லாததை காரணம் காட்டி, நடிகர் திலீப் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார். பல்சர் சுனி உட்பட 6 பேர் குற்றவாளிகள் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

குற்றவாளிகள் 6 பேருக்கான தண்டனை விபரங்கள் டிசம்பர் 12ம் தேதி வெளியிடப்படும் என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது.
'(ஐ)



# வெள்ள அனர்த்தத்தால் காவு கொள்ளப்படும் மணல் அகழ்வுப்பிரதேசம்

**க.பிரணவசுதன்**
*மாணவன்,*
*ஊடகக்கற்றைகள் துறை,*
*யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.*



"பட்ட குடியே மீண்டும் மீண்டும் கெட்டு நொந்து போனது போல" முறையற்றதும் சட்டவிரோதமானதுமான பாரிய மணல் அகழ்வுகளால் பாதிப்படைந்த யாழ் மாவட்டத்தினுடைய வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அம்பன் கிராம சேவையாளர் பிரிவின் கொட்டோடை கிராமம் நாட்டில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடர் அனர்த்தத்தின் காரணமாக மீண்டும் கரையோரங்கள் பாதிப்படைந்த பிரதேசமாக மாறியுள்ளது. இப்பிரதேசமானது கடல் மட்டத்திலிருந்து ஏற்கனவே தாழ்வான பிரதேசமாகும் எனவே வழமையாகவே பருவ கால மாற்றங்களால் கடல் நீரானது கிராமத்துக்குள் உட்புகும் தன்மை காணப்பட்டுள்ளது. இருந்த போதிலும் அத்தகைய தாழ்வான பகுதிகளில் தொடர்ச்சியாக 2010தொடக்கம் அண்மை காலம் வரை மேற்கொள்ளப்பட்ட மணல் அகழ்வுகளால் இங்கே பாரிய பள்ளங்கள் ஏற்பட்டுத்தப்பட்டுள்ளன.

மேலும் இப்பிரதேசத்தில் தற்பொழுது சட்ட விரோதமான மணல் அகழ்வுகள் இல்லாது காணப்பட்டாலும் முன்னர் செய்யப்பட்ட பாரிய மணல் அகழ்வுகள் மூலம் கடல் மட்டத்திற்கும் கீழாக பள்ள நிலங்கள் ஆக்கப்பட்டிருக்கின்ற இப் பிரதேசத்தின் தரைப்பகுதிகளுக்குள் வெள்ளநீர் தேங்கி நிற்கக் கூடிய பாதகமான நிலையோடு கடல் நீரும் உட்புகக் கூடியதான அபாய நிலை ஏற்பட்டுள்ளது. இது இங்கு வாழும் மக்களின் இயல்பு நிலையை வெகுவாக பாதி த்துள்ளது அதாவது மணல் அகழ்வு பள்ளங்களில் தேங்கும் வெள்ள நீரானது அருகில் உள்ள கிணறுகள், நீரூற்றுக்கள், மற்றும் நிலத்தடி நீர் ஆதாரங்களில் கலப்பதால் குடிநீர் மாசடைகின்ற தன்மை இப்பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள முதல் பிரச்சினையாக காணப்படுகின்றது மேலும் நீண்ட நாட்கள் நீர் தேங்கி நிற்பதால் நுளம்புகள் பெருகக்கூடிய பள்ளங்களாகவும் இவை மாறியுள்ள நிலைமை என்பது பிரதேசத்தில் டெங்கு, மலேரியா போன்ற தொற்றுநோய்களை ஏற்படுத்தும் அச்சுறுத்தலாக உள்ளது.



அத்துடன் இங்கு வாழுகின்ற மக்களின் பிரதான தொழில்களாக விவசாயம், கால்நடைவளர்ப்பு போன்றவை காணப்படுகின்றன. வெள்ள நீர் ஆனது அருகில் உள்ள விவசாய நிலங்களுக்குள் புகுவதால் பயிர்கள் அழிவது, மண்வளம் குறைவடைவது போன்ற பாதிப்புகளும் ஏற்பட்டு இங்குள்ள தரைவளத்திற்கேற்றதான வான்பயிர்,செய்பயிர் ஆகியவற்றினையும் பெருமளவு சேத முறச் செய்துள்ளதால் இங்குள்ள மக்களின் சீவனோபாயத் தொழில்களுக்கான வாய்ப்பையும் இல்லாமல் ஆக்கியுள்ளது. எனவே இப்பிரதேசமானது இச்சம்பவத்தினால் சுகாதார ரீதியிலும் சுற்றுச்சூழல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பல்வேறுபட்ட பாதிப்புகளை பெற்றுள்ளது. இத்தகையதான ஒரு புவிசார் அழிவின் ஊடாக இங்கு வாழும் மக்களின் ஒட்டுமொத்தமான வாழ்வியலுக்கான வழிகளும் இல்லாமல் ஆக்கப்பட்டு இருப்பதானது தேசவிரோதமானதாகும் என்பதோடு யாழ் மாவட்டத்தின் தரை அமைப்புக்கான புற வரிக்கோட்டையே திரிவுப்படுத்தும் பாரிய குற்றமாகும். ஆதலினால் இலங்கை சனநாயகச்சோசலிச குடியரசின் ஆள்புலக் கட்டமைப்பின் இவ்வகை சார்ந்த நிருவாகப் பொறிமுறைகள் உடனடியாக செயற்பட்டு பயனுறுதிமிக்கதான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி இந்தப் பிரதேசத்தின் இயற்கை வளத்தின் இருப்பையும், இங்கு வாழும் மக்களையும் அவர்களது சீவனோபாயத்தையும் பாதுகாத்துக் கொள்வதானது அத்தியாவசியமானதாக அமைகின்றது.

# போர் நிறுத்த ஒப்பந்தம் மீறல்: கம்போடியா மீது தாய்லாந்து ராணுவம் தாக்குதல்



போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி கம்போடியா மற்றும் தாய்லாந்து ராணுவத்தினர், ஒருவர் மீது இன்னொருவர் தாக்குதல் நடத்த தொடங்கியுள்ளனர்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளான கம்போடியா, தாய்லாந்து இடையே நீண்ட காலமாக எல்லை பிரச்சனை நிலவி வருகிறது. இரு நாட்டு எல்லையில் அமைந்துள்ள கோவில்கள் யாருக்கு சொந்தம் என்ற விவகாரம் நீண்ட நாட்களாக தீர்க்கப்படாமல் உள்ளது.

அவ்வப்போது இரு நாட்டு ராணுவத்தினரும் மோதிக் கொள்வது வழக்கம். கடந்த ஜூலை மாதம் இருநாட்டு ராணுவத்தினரும் முழுவீச்சில் போர் நடத்தினர். இதில் இரு தரப்பிலும் சேர்ந்து 43 பேர் கொல்லப்பட்டனர். அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்றும் சர்வதேச நாடுகள் முன்னின்று நடத்திய பேச்சு வார்த்தையை தொடர்ந்து இரு நாடுகளும் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டன.

எனினும் அவ்வப்போது எல்லையில் சிறு சிறு மோதல்கள் நடப்பது வழக்கமாக இருந்து வருகிறது. நேற்று கம்போடியா ராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் தாய்லாந்து ராணுவத்தைச் சேர்ந்த வீரர் கொல்லப்பட்டார். ஏராளமானோர் காயம் அடைந்தனர்.

தொடர்ந்து இன்று அதிகாலை 5 மணிக்கு பதில் தாக்குதல் நடத்த தாய்லாந்து ராணுவம் உத்திரவிட்டது. அதன்படி கம்போடியா ராணுவத்தினர் மீது தாய்லாந்து நாட்டு ராணுவத்தினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருவதாகவும், தாங்கள் தாக்குதல் எதுவும் நடத்தவில்லை என்றும் கம்போடியா ராணுவம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்றும் மலேசிய பிரதமர் அன்வர் இப்ராகிம் ஆகியோர் முன்னிலையில் ஏற்படுத்தப்பட்ட அமைதி ஒப்பந்தத்திற்கு மாறாக தாய்லாந்து ராணுவம் தாக்குதல் நடத்தி வருவது கடும் கண்டனத்துக்கு உரியது என்று கம்போடியா தெரிவித்துள்ளது. (ஐ)

## உலகின் மிக உயரமான ஹோட்டல் துபாயில் திறப்பு



உலகின் மிக உயரமான ஹோட்டல் துபாயில் திறக்கப்பட்டுள்ளது. இந்த ஹோட்டல் வானளாவிய உயரத்துக்கு கட்ட திட்டமிடப்படவில்லை என்றும், தற்செயலாக நடந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காசிய நாடான ஐக்கிய அரபு எமிரேட்சின் துபாய் நகரில், கடற்கரையோரம், 1,237 அடி உயரத்தில், 40,000 சதுரடியில், 'சீல் டவர்' என்ற பெயரில் வானுயர ஹோட்டல் ஒன்றை, 'இம்மோ பிரஸ்டீஜ் லிமிடெட்' என்ற நிறுவனம் திறந்துள்ளது.

கண்ணாடி மாளிகை இந்த ஹோட்டலை, 'தி பர்ஸ்ட் குரூப்' என்ற கட்டுமான நிறுவனம் கட்டி கொடுத்துள்ளது. கண்ணாடி மாளிகையாக ஜொலிக்கும் இந்த ஹோட்டலில், மொத்தம் 82 தளங்கள், 1,004 அறைகள் உள்ளன.

"இந்த ஹோட்டல் இவ்வளவு உயரத்தில் கட்ட முதலில் தீர்மானிக்கப்படனில்லை.

''வரைபடங்கள் திருத்தப்பட்டு மாற்றியமைக்கப்பட்டபோது இதன் உயரம் எதிர்பாராதவிதமாக அதிகரிக்கப்பட்டது," என, 'தி பர்ஸ்ட் குரூப்'பின் தலைமை செயல் அதிகாரி ராப் பர்ன்ஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "நாங்கள் கண்கவர் கட்டடம் ஒன்றை கட்ட விரும்பினோம். அதற்காக ஒவ்வொரு வசதிகளாக சேர்த்து கொண்டே சென்றோம்.

"இறுதியில், அது உலகின் மிக உயரமான கட்டடமாக மாறியது. உலகின் மிக உயர ஹோட்டலை கட்ட வேண்டும் என, நாங்கள் நிச்சயமாக திட்டமிடவில்லை. இது எதிர்பாராதவிதமாக நடந்தது," என்றனர்.

ஹோட்டல் உச்சியில் உள்ள, 'ஸ்கை லவுஞ்ச்' எனப்படும் ஓய்விடம் மற்றும் பிற உயரமான தளங்களில் இருந்து துபாய் கடற்கரை, பாம் ஜ/மேரா மற்றும் வளைகுடாவின் 360 டிகிரி முழுமையான காட்சியை பார்க்க முடியும்.

மேலும், 76வது தளத்தில் காற்றை செலுத்தும் வெற்றிடத்துக்குள் அமைக்கப்பட்டுள்ள நீச்சல் குளத்தில் உள்ள தண்ணீர், வானத்தில் மறைவது போல இருக்கும்.

பாரம்பரியம் செங்குத்தான பூங்காக்கள் உள்ளிட்ட சிறப்பம்சங்களுடன், மேல் தளத்தில் பிரிட்டனை தளமாகக் கொண்ட, 'ட்டு பிராண்டு' உட்பட மொத்தம் எட்டு உ ணவகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஹோட்டல், பிரமாண்ட கட்டடங்களை விரும்பும் துபாயின் பாரம்பரியத்துக்கு ஏற்ப கட்டப்பட்டுள்ளது. (ஐ)




## சிங்கப்பூரில் 2026 முதல் விமானப் பயணிகளுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிப்பு

சிங்கப்பூரில் வரும் 2026ம் ஆண்டு ஜனவரி இறுதியில் இருந்து விமானப்பயணிகளுக்கான கட்டுப்பாடுகள் மிகவும் கடுமையாக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிற நாடுகளில் இருந்து தங்கள் நாட்டுக்கு வரும் விமான நிறுவனங்களுக்கு சிங்கப்பூர் குடிவரவு மற்றும் சோதனைச்சாவடிகள் ஆணையம் (ஐஊயு) நோட்டீஸ் அனுப்பியுள்ளது. அதில், சிங்கப்பூருக்கு வரும் பயணிகளின் விபரங்கள் மற்றும் ஆவணங்களை முன்கூட்டியே அனுப்பி வைக்க வேண்டும். அதனை ஆய்வு செய்த பிறகு, தகுதியான ஆவணங்கள் இருந்தால் மட்டுமே அவர்கள் சிங்கப்பூர் வர அனுமதிக்கப்படுவார்கள். இல்லையெனில், அவர்கள் புறப்படும் விமான நிலையத்திலே தடுத்து நிறுத்தப்படுவார்கள்.

குறிப்பாக, உரிய விசா அல்லது 6 மாத காலத்திற்கு செல்லுபடியாகும் பயண ஆவணங்கள் இல்லாத பயணிகளுக்கு அனுமதி கிடையாது.

சிங்கப்பூருக்குச் செல்ல விரும்பும் பயணிகள், விமான டிக்கெட் எடுப்பதற்கு முன், ஐசிஏ தளத்தின் (ஐஊயு குநநனடியஉம ஊளாயநெட) வழியாக நுழைவு அனுமதிக்கு விண்ணப்பிக்க வேண்டும். உரிய ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். ஐசிஏ நேரடியாக அனுமதி அளிக்கும் வரை பயணத்தை திட்டமிடக் கூடாது.

இந்த விதிகளை கடைபிடிக்காத விமான நிறுவனங்களுக்கு ரூ.7 லட்சம் வரையில் அபராதம் விதிக்கப்படும். மேலும், தகுதியான ஆவணங்கள் இல்லாத பயணியை அனுமதித்த விமான நிறுவன ஊழியர்களுக்கு 6 மாதம் வரை சிறை தண்டனை விதிக்கப்படும், இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாடுகள் வரும் 2026ம் ஆண்டு ஜனவரி 30ம் தேதி முதல் அமலுக்கு வர இருக்கிறது.

உலகளவில் மிகவும் பாதுகாப்பான நாடுகளில் சிங்கப்பூர் முன்னிலை வகிக்கிறது. இதனை தொடர்ந்து உறுதி செய்யும் விதமாக, விமான நிலையங்களில் கடுமையான கட்டுப்பாடுகளை அந்நாடு விதித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நேர்மையுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது வழமையாகவே துணைவேந்தர் தெரிவினை எதிர்நோக்கும் ஏனைய பல்கலைக்கழகங்களின் பேரவையின் வெளிநிலை உறுப்பினர்களுடன் நடாத்தப்பட்ட சந்திப்பு போன்றே அமைந்திருந்தது என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை துணைவேந்தர் தெரிவினையிட்டு ஒரு விசேட கூட்டத்திற்காக 09.12.2025 அன்று நாட்குறித்துள்ளது. அண்மைக்காலங்களில் வேறு சில பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் தெரிவில் ஏற்பட்டவை போன்ற சிக்கல் நிலைமைகள் தவிர்க்கப்படுவதற்காகவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேற்படி பேரவை உறுப்பினர்களை சந்தித்து அவர்களுக்கு இவ்விடயம் தொடர்பாக சுற்றறிக்கையில் கூறப்பட்ட தெளிவூட்டல்களை வழங்குவதற்காகவே இன்றைய சந்திப்பு நடைபெற்றுள்ளது. இவ்வாறான சந்திப்பு முன்பும் வேறு பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர் தெரிவின் முன்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்டமை இங்கே முக்கியமாக கவனிக்க வேண்டியதொன்று.

மேற்படி சுற்றறிக்கை ஏற்பாடுகளில் ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ அவதானியாக மூத்த கல்விமான்களில் ஒருவரும் பல்கலைக்கழகமொன்றின் முன்னைநாள் துணைவேந்தரும் ஆகிய ஒருவர் நியமிக்கப்பட்டு அவரின் பிரசன்னத்தில் நாளைய விசேட பேரவைக் கூட்டம் நடைபெறும்.

விண்ணப்பம் செய்த 7 பேரில் மூவர் அவர்கள் பெற்ற புள்ளியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் புள்ளி ஒழுங்கு வரிசையில் சிபாரசு செய்யப்பட்டு விரைவாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்படும். இதனை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக்கழக சட்டங்களில் குறிக்கப்பட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் தனக்குரிய அதிகாரங்களை பயன்படுத்தி ஆணைக்குழுவின் சிபாரிசுடன் ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்பி வைக்கும்.

இவ்வாறான நீண்ட செயற்பாடுகள் பற்றி, அதன் அவசியம் கருதி ஒரு தெளிவூட்டல் இன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளது. இது ஒரு இருமுக கருத்துப் பரிமாற்றல் முறையில் நடைபெற்றதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது. மேற்படி கலந்துரையாடலில் இந்த அதிமுக்கியமான செயன்முறை உண்மைத்தன்மையையும் நேர்மைத்தன்மையையும் பிரதிபலிக்குமாறு சுற்றறிக்கையில் கொடுக்கப்பட்ட வழிப்படுத்தல்களை கவனத்திற்கொண்டு புள்ளியிடல் மற்றும் மற்றைய செயன்முறைகளை செய்யுமாறு பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விநயமாக கேட்டுக்கொண்டதாக அறியக்கிடைக்கிறது.

இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு காட்டிய வெளிப்படைத்தன்மையான அணுகுமுறையையும் உரிய செயன்முறைகளில் காட்டிய அக்கறையையும் பேரவை உறுப்பினர்கள் சிலாகித்துக் கூறியதாக தகவல் தெரிந்தவர்கள் அறியத்தந்துள்ளனர்.

## அனர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணாமல்போயுள்ளனர். அத்துடன் 22 ஆயிரத்து 218 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்து 861 பேர் 690 பாதுகாப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் இன்று நண்பகல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காவலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் ஊடகங்களிடம் தெரிவித்தவை வருமாறு:-

"கைது செய்யப்பட்ட இரவு மாலை 7 மணியளவில் பொலிஸ் நிலையத்தில் அவரைக் கடைசியாகப் பார்த்தனர் எனவும், அப்போது அவர் நலமாக இருந்தார் எனவும் குடும்பத்தினர் கூறுகின்றனர். டிசம்பர் 3 ஆம் திகதி அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, முந்தைய இரவு அவர் தாக்கப்பட்டிருக்கின்றார் எனத் தோன்றியதாகக் குடும்பத்தினர் கூறுகின்றனர்.

பின்னர் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு டிசம்பர் 5 ஆம் திகதி சிறையில் இருந்து மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். பின்னர் நேற்று (டிசம்பர் 7 ஆம் திகதி) இறந்துவிட்டார் என அறிவிக்கப்பட்டது. பொலிஸ் துறையின் மிருகத்தனம் காரணமாக அவரது மரணம் ஏற்பட்டது என்று உறவினர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

'ஐஸ்' போதைப்பொருள் பயன்பாடு தொடர்பான நோய் காரணமாக அவரது மரணம் ஏற்பட்டது என்று பொலிஸார் கூறுகின்றனர். இந்தப் போட்டி கூற்றுக்களுக்கு முறையான, சுயாதீன விசாரணை தேவை.

மட்டக்களப்பில் இதுபோன்ற சம்பவம் நடப்பது இது முதல் முறையல்ல. பொலிஸாரின் மிருகத்தனம் மற்றும் கைதுக்குப் பிறகு இறப்புகள் பற்றிய குற்றச்சாட்டுகள் தொடர்ந்து வெளிவருகின்றன. பொறுப்புக்கூறல் குறைகின்றது.

ஒருவர் கைது செய்யப்படும்போது, அவர்களின் வாழ்க்கை, பாதுகாப்பு மற்றும் கண்ணியத்துக்கு அரசு பொறுப்பு. எந்தக் குற்றச்சாட்டும் - குறிப்பாக சைக்கிள் திருட்டு போன்ற சிறிய குற்றச்சாட்டு - காவலில் உள்ள மரணத்தை நியாயப்படுத்தாது.

பிரேத பரிசோதனை அறிக்கை தாமதமின்றி வெளியிடப்பட வேண்டும். விசாரணை மட்டக்களப்பு பொலிஸாரிடமிருந்து சுயாதீனமாக இருக்க வேண்டும். மேலும் தவறு நிரூபிக்கப்பட்டால் பொறுப்பானவர்கள் பொறுப்புக்கூறலுக்கு உள்ளாக்கப்பட வேண்டும்." - என்றார்.

## ஊர்காவற்றுறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்தப் பாதீட்டை

மீண்டும் சபையில் நிறைவேற்றுவதற்கான விசேட அமர்வு இன்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தவிசாளர் அன்னராசா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சபையின் வருமானம் ஊடாக முன்னெடுக்கப்படும் திட்டங்கள், உதவி கோரியுள்ள முன்மொழிவுகள், சிறப்பு வருவாய் முயற்சிகள், உள்ளிட்ட பல திருத்தங்களுடன் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு

இரண்டாவது தடவையாகவும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது.

பாதீட்டை நிறைவேற்றுவதற்காக விடப்பட்ட வாக்கெடுப்பின்போது எதிராக 8 வாக்குகளும், ஆதரவாக 5 வாக்கிகளும் கிடைக்கப் பெற்ற நிலையில் மேற்படி பாதீடு 3 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

இன்றைய வாக்கெடுப்பில் ஈ.பி.டி.பியின் 4 உறுப்பினர்களும், தேசிய மக்கள் சக்தியின் 3 உறுப்பினர்களும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஓர் உறுப்பினரும் எதிராக வாக்களித்தனர்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தவிசாளர் மற்றும் இரு உறுப்பினர்களுடன் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஓர் உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்து நழுவிச் சென்ற உறுப்பினரும் ஆதரவாக வாக்களித்தனர்.

இதன்படி 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு 3 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றச் சட்டங்களின் பிரகாரம் இரண்டாவது தடவையாகவும் பாதீடு தோற்கடிக்கப்பட்டால் அது தவிசாளரது தன்னிச்சையான விசேட அதிகாரத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு செயலாக்கம் பெறும்.

# அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளை முறையாக ஒருங்கிணைக்க தேசியக் குழு நியமனம்!

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளை முறையாக ஒருங்கிணைத்து, உரிய நபர்களுக்கு வழங்குவதற்காக தேசிய அளவிலான குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்துள்ளதாக பாதுகாப்பு பிரதி அமைச்சர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் இன்றையதினம் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார். வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் உதவிகள் மற்றும் உபகரணங்கள் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சரியாகக் கிடைப்பதை இந்தக் குழு உறுதி செய்யும் எனவும் அவர் தெரிவித்தார்.

இன்று (08) முதல் நடைமுறைக்கு வந்துள்ள இந்தக் குழுவின் தலைவராக பாதுகாப்பு பிரதி அமைச்சர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகர நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பிலான இறுதி தீர்மானம்!

நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமையால் பாதிக்கப்பட்டிருந்த பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் கல்வி அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

இன்றையதினம் கல்வி அமைச்சில் தேசியப் பாடசாலை அதிபர்கள், கல்வி நிர்வாக அதிகாரிகள், தேசிய மற்றும் மாகாண அமைச்சின் மூத்த அதிகாரிகள் இணைந்த கூட்டம் இசுருபாய அமைச்சு வளாகத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் பின்வருமாறு:

ஆரம்பிக்க முடியும் அனைத்து தேசிய மற்றும் மாகாணப் பள்ளிகளும் டிசம்பர் 16 அன்று திறக்கப்பட வேண்டும்.

டிசம்பர் 16 அன்று திறக்க முடியாத பள்ளிகளுக்கான தொடக்க நாளை நிர்ணயிக்கும் அதிகாரம் பாடசாலை அதிபர்களுக்கும், மாகாண கல்வி அதிகாரிகளுக்கும் வழங்கப்படுகிறது.

டிசம்பர் 16 அன்று ஆரம்பிக்கும் பள்ளிகளுக்கு வருட இறுதி விடுமுறை டிசம்பர் 23 முதல் வழங்கப்படும்.

டிசம்பர் 16 முதல் 22 வரை உள்ள காலத்தில் பள்ளி சுத்தம், பராமரிப்பு மற்றும் மீளமைப்பு பணிகள், வெள்ளப் பேரழிவால் பாதிக்கப்பட்ட மாணவர்களை அடையாளம் காணல், அவர்களுக்கு தேவையான மனநல மற்றும் பிற நலத்திட்ட உதவிகளை ஏற்பாடு செய்தல் அல்லது சம்பந்தப்பட்ட இடங்களுக்கு பரிந்துரை செய்தல்

இவற்றை மட்டுமே மேற்கொள்ள வேண்டும்.

2026 கல்வியாண்டு அனைத்து பள்ளிகளுக்கும் ஜனவரி 01 அன்று தொடங்கப்படும்.

கல்வியாண்டு தொடங்கியவுடன், 2025 சாதாரண தரத் தேர்வுக்கு (O/L) தோன்றும் 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் காலாண்டுத் தேர்வு நடத்தப்படும்.

பிற வகுப்புகளுக்கான காலாண்டுத் தேர்வுகளை நடத்த வேண்டுமா என்பதற்கான முடிவு அதிபர் மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு ஒப்படைக்கப்படுகிறது.

தேர்வு நடத்தப்பட்டாலோ இல்லையோ, அனைத்து மாணவர்களும் அடுத்த வகுப்பிற்குத் தகுதி பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள்.

பரீட்சைத் திணைக்களத்துடன் ஆலோசித்து 2025 உயர்தர (A/L) மீதமுள்ள பாடங்களை மிக விரைவில் நடத்தும் திகதியை நிர்ணயித்தல்.

2025 உயர்தர மீதமுள்ள பாடத் தேர்வுகளுக்கான கால அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு, 2026 கல்வியாண்டு ஆரம்பிக்கும் நாள் மற்றும் வருடாந்திர கால அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும்- என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு நாமல் ராஜபக்ஷ கோரிக்கை!

நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு கடிதம் ஒன்றை சமர்ப்பித்து தெரிவித்துள்ளார்.

குறித்த கடிதத்தில்,

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கிலும், தேவையான பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கிலும், மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக, நாடாளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 16இன் கீழ் நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டில் நிலவிய சீரற்ற வானிலை காரணமாக நாட்டின் பல மாவட்டங்களில் பெருமளவான மக்களின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இதனால் மக்கள் வாழ்க்கைக்கும், நாட்டின் பொருளாதாரத்திற்கும் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளதோடு, அதனை இன்றளவும் துல்லியமாக கணக்கிட முடியாதுள்ளதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மற்றும் இவ்வாறான அனர்த்த நிலைமையின் போது மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் மிக விரைவில் பொறுப்புடன் தலையிட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் வாழ்க்கையை அனைத்துத் துறைகளிலும் இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் இதைவிட முறைப்படியான விதத்தில் தலையிட வேண்டும் எனவும் நாமல் ராஜபக்ஷ கடிதத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.12.2025 வெளியிடப்பெற்றது.